## 19

# கிறிஸ்துவுக்குள் உண்மை நிலைகள்

புதிய ஏற்பாட்டு நிருபங்கள் முழுவதிலும் ''கிறிஸ்துவுக்குள்'', ''கிறிஸ்துவோடுகூட'', ''கிறிஸ்துவின்மூலமாக'' மற்றும் ''கிறிஸ்துவில்'' போன்ற சொற்களை அடிக்கடி காண்கிறோம். இவை இயேசுவானவர் நமக்காகச் செய்திருப்பவைகளின் விளைவாக விசுவாசிகளாகிய நாம் பெறும் பயன்களைச் சுட்டிக்காட்டுகின்றன. தேவன நம்மைக் ''கிறிஸ்துவுக்குள்'' காண்பதுபோல நாமும் காண் போமானால், நாம் எப்படி வாழ வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அப்படி வாழ அது நமக்கு உதவியாக இருக்கும். சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தமது சீஷர்கள் முழுமையான ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ச்சிபெறும்படியாக, கிறிஸ்துவுக்குள் அவர்கள் யார் என்பதைப் போதிக்க வேண்டும்.

முதலாவதாக, ''கிறிஸ்துவுக்குள்'' இருப்பது என்பதின் அர்த்தம் என்ன?

நாம் மறுபடியும் பிறக்கும்போது, கிறிஸ்துவின் சரீரத்தில் வைக்கப் பட்டு, அவரோடு ஆவிக்குரிய பிரகாரமாக ஒன்றாகிறோம். இதை உறுதிப்படுத்தும் சில புதிய ஏற்பாட்டு வசனங்களைப் பார்ப்போம்:

> அநேகராகிய நாமும் *கிறிஸ்துவுக்குள்* ஒரே சரீர மாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களா யிருக்கிறோம் (ரோமர் 12:5 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).
>
> அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், *அவருடனே* ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரி. 6:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> நீங்களே *கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறீர்கள்* [1 கொரி. 12:27 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் நாம் நம்மை நாமே அவரோடு இணைக்கப்பட்டவர்களாகவும், அவருடைய சரீரத்தின் உறுப்பினர்களாகவும், அவரோடு ஒருமனப்பட்டு இருக்கிறவர்களாகவும் காண வேண்டும். அவர் நமக்குள் இருக்கிறார், நாம் அவருக்குள் இருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கிறபடியால், நமக்குக் கிடைக்கும் சில பயன்களைக் குறித்து இந்த வசனம் சொல்லுகிறது:

> அந்தப்படி, நீங்கள் அவராலே *கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டிருக்கிறீர்கள்*. எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் [1 கொரி. 1:30, 31அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் [''குற்றமற்றவர்கள்'' இப்போது சரியாதைச் செய்கிறவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறோம்], பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் [தேவனுடைய பரிசுத்த பயன்படுத்துதலுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டிருக் கிறோம்], மீட்கப்பட்டிருக்கிறோம் [அடிமைத்தனத்திலிருந்து விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறோம்]. நாம் வருங்காலத்தில் ஒரு கட்டத்தில் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, மீட்கப்படக் *காத்திருக்கவில்லை*. ஆனால் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் இப்போதே இந்தப் பயன்களை அனுபவிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் நமது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக் கின்றன:

> இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலை யாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக் கிறோம். [குமாரனாகிய] *அவருக்குள்*, அவருடைய இரத்தத்தினாலே, *பாவமன்னிப்பாகிய* மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது [கொலோ. 1:13–14 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நாம் இனிமேலும் அந்தகார ராஜ்யமாகிய சாத்தானின் ஆளுகையில் இல்லை, ஒளியின் ராஜ்யத்தில், இயேசுவின் ராஜ்யத்தில் இருக்கிறோம் என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது.





> இப்படியிருக்க, ஒருவன் *கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்* புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின [2 கொரி. 5:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நீங்கள கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக இருக்கிறபடியால், ஒரு ''புதுச் சிருஷ்டியாக'' இருப்பதற்காக தேவனைத் துதியுங்கள். கம்பளிப் புழுவாக இருந்த நாம் வண்ணத்துப் பூச்சியாக மாற்றப்பட்டிருக்கிறோம்! உங்களுடைய ஆவியில் ஒரு புதிய இயல்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாகச் சாத்தானின் சுயநல இயல்பை நீங்கள் உங்கள் ஆவியில் பெற்றிருந்தீர்கள். இப்போது உங்கள் கடந்தகால வாழ்க்கை ஒழிந்துபோயிருக்கிறது.

## கிறிஸ்துவுக்குள் இன்னுமதிக ஆசீர்வாதங்கள்

> நீங்களெல்லாரும் *கிறிஸ்து* இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே [கலா. 3:26 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நாம் உண்மையில் தேவனுடைய சொந்தக் குமாரர்களாக, அவருடைய ஆவியினால் பிறந்தவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவது அற்புதமானதாக இருக்கிறது அல்லவா? நாம் ஜெபத்தில் அவரிடம் வரும்போது, நம்முடைய தேவனாக மட்டுமல்ல, நம்முடைய பிதாவாகவும் அவரை அணுகுகிறோம்.

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் *கிறிஸ்து இயேசுவுக்குள்* சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் [எபே. 2:10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவன் நம்மைச் சிருஷ்டித்திருப்பது மட்டுமல்லாமல், கிறிஸ்துவுக்குள் நம்மை மறுபடியுமாகச் சிருஷ்டித்திருக்கிறார். மேலும் நாம் எல்லோரும் நிறைவேற்ற வேண்டிய ஒரு ஊழியத்தை அவர் முன்குறித்திருக்கிறார். ''நற்கிரியைகளை...முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.'' நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தெய்வீக முடிவு இருக்கிறது.

> நாம் *அவருக்குள்* தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் [2 கொரி. 5:21அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதினால் பெற்றிருக்கும் நீதி உண்மையின் தேவனுடைய நீதியாகும். தேவன் நமக்குள்

வாசம்பண்ணி, தமது பரிசுத்த ஆவியானவரால் நம்மை மாற்றியிருப்பதே இதற்குக் காரணமாகும். நமது நற்கிரியைகள் உண்மையில் தேவன் நம்மூலமாகச் செய்யும் நற்கிரியைகளாகும்.

> இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே [ரோமர் 8:37 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

பவுல் குறிப்படும் ''இவைகள்'' எவை? ரோம நிருபத்தில் இந்த வசனத்துக்கு முந்தைய வசனங்களை வாசிக்கும்போது, இவை விசுவாசிகள் அனுபவிக்கும் சோதனைகளையும் பாடுகளையுமே குறிக்கின்றன என்பதை அறிகிறோம். இரத்தச்சாட்சிகளாக மரிக்கும் போது உலகம் நம்மைப் பாதிக்கப்பட்டவர்களாகக் காணும்போதுகூட நாமே ஜெயங்கொண்டவர்களாக இருக்கிறோம். நாம் மரிக்கும்போது, பரலோகத்துக்குச் செல்லுகிறபடியால், நாம் கிறிஸ்துவின் மூலமாக முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம்!

> என்னைப் பெலப்படுத்துகிற *கிறிஸ்துவினாலே* எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு [பிலி. 4:13 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவன் நமக்குப் பலத்தையும் திறனையும் கொடுக்கிறபடியால், கிறிஸ்துவினாலே நம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவர் நமக்குக் கொடுக்கும் எந்தப் பணியையும் நம்மால் செய்ய முடியும்.

> என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் [பிலி. 4:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நாம் முதலில் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுவோமானால், தேவன் நமது மெய்யான தேவைகளைச் சந்திப்பார் என்பதை எதிர்பார்க்க முடியும். ஆண்டவர் நமது மேய்ப்பராக இருக்கிறார், அவர் தமது ஆடுகளைப் பராமரிப்பார்!

## தேவன் சொல்லுவதோடுகூட ஒத்துப் போகுதல்

நம்மில் சிலர் தேவனுடைய வார்த்தை நம்மைக் குறித்துச் சொல்லுவதை விசுவாசிப்பதில்லை என்பது துரதிருஷ்டமான காரியமாகும். நாம் வேதாகமம் சொல்லுவதற்கு முரண்பாடான வார்த்தை களைச் சொல்லுவதின் மூலம் இதை வெளிப்படுத்துகிறோம். ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய என்னால் முடியும்'' என்று சொல்லுவதற்கு மாறாக, ''என்னால் அதைச் செய்ய முடியும் என்று தோன்றவில்லை'' என்கிறோம்.





இப்படிப்பட்ட வாசகங்களை வேதாகமம் ''துர்ச்செய்தி'' என்று அழைக்கிறது. ஏனென்றால் இவை தேவன் சொல்லுவதோடுகூட ஒத்துப்போவதில்லை [பார்க்க, எண். 13:33]. ஆனால் நமது இருதயம் தேவனுடைய வார்த்தையினால் நிறைந்திருக்குமானால், நாம் விசுவாசம் நிறைந்தவர்களாக இருப்போம். வேதவசனத்துக்கு ஒத்துப் போகும் காரியங்களை மட்டுமே விசுவாசிப்போம், சொல்லுவோம்.

## சில வேதாகமரீதியான அறிக்கைகள்

தேவன் நாம் யார் என்று சொல்லுகிறாரோ அதை நாம் விசுவாசித்து, சொல்ல வேண்டும்.

நம்மால் எதைச் செய்ய முடியும் என்று தேவன் சொல்லுகிறாரோ அதைச் செய்ய முடியும் என்று விசுவாசித்து, சொல்ல வேண்டும்.

தாம் எப்படியிருப்பதாகத் தேவன் சொல்லுகிறாரோ அப்படியே அவர் இருப்பதாக நாம் விசுவாசித்து, சொல்ல வேண்டும்.

தேவன் தாம் என்ன செய்வதாகச் சொல்லுகிறாரோ அதை அவர் செய்வார் என்று நாம் விசுவாசித்து, சொல்ல வேண்டும்.

கீழே எல்லா விசுவாசிகளும் துணிவோடு அறிக்கையிடக் கூடிய சில வேதாகம வாசகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லோமே ''கிறிஸ்துவுக்குள்'' உண்மை நிலைகளாக இராவிட்டாலும், எல்லாமே வேதவசனங்களின்படி உண்மையாக இருக்கின்றன.

நான் மீட்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் [பார்க்க, 1 கொரி. 1:30].

நாம் அந்தகாரத்தின் ராஜ்யத்திலிருந்து தேவனுடைய குமாரனுடைய ராஜ்யமாகிய ஒளியின் ராஜ்யத்துக்குள் கொண்டுவரப் பட்டிருக்கிறேன் [பார்க்க, கொலோ. 1:13].

கிறிஸ்துவுக்குள் என்னுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப் பட்டிருக்கின்றன [பார்க்க, எபே. 1:7].

நான் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாக இருக்கிறேன், பழைய வாழ்க்கை அழிந்துபோயிற்று [பார்க்க, 2 கொரி. 5:17].

தேவன் நான் நடக்கும்படி நற்கிரியைகளை முன்னதாகவே ஆயத்தம்பண்ணியிருக்கிறார் [பார்க்க, எபே. 2:10].

நான் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகியிருக்கிறேன் [பார்க்க, 2 கொரி. 5:21].

என்னிடத்தில் அன்புகூரும் கிறிஸ்துவின் மூலமாக நான் எல்லாக் காரியங்களிலேயும் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவனாக இருக்கிறேன் [பார்க்க, ரோமர் 8:37].

என்னைப் பலப்படுத்தும் கிறிஸ்துவினாலே எல்லாக் காரியங்களையும் என்னால் செய்ய முடியும் [பார்க்க, பிலி. 4:13].

எனது தேவன் கிறிஸ்து இயேசுவில் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே என் தேவைகளையெல்லாம் சந்திக்கிறார் [பார்க்க, பிலி. 4:19].

நான் ஒரு பரிசுத்தவானாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறேன் [பார்க்க, 1 கொரி. 1:2].

நான் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறேன் [பார்க்க, யோவான் 1:12; 1 யோவான் 3:1–2].

என்னுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறது [பார்க்க, 1 கொரி. 6:19].

இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் [பார்க்க, கலா. 2:20].

நான் சாத்தானின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறேன் [பார்க்க, அப். 26:18].

பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது [பார்க்க, ரோமர் 5:5].

உலகத்திலிருக்கிறவனிலும் [சாத்தான்] என்னிலிருக்கிறவர் பெரியவர் [பார்க்க, 1 யோவான் 4:4].

நான் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன் [பார்க்க, எபே. 1:3].

நான் சாத்தானுடைய சக்திகளுக்கு மேலாக, உன்னதங்களிலே கிறிஸ்துவோடுகூட உட்கார வைக்கப்பட்டிருக்கிறேன் [பார்க்க, எபே. 2:4–6].

நான் தேவனை நேசிக்கிறபடியாலும், அவருடைய நோக்கங்களின்படி அழைக்கப்பட்டிருக்கிறபடியாலும் அவர் எல்லாக் காரியங்களையும் நன்மையாக முடியும்படி செய்கிறார் [பார்க்க, ரோமர் 8:28].

தேவன் எனது பக்கத்தில் இருக்கும்போது, யார் என்னை எதிர்த்து நிற்க முடியும்? [பார்க்க, ரோமர் 8:31].

கிறிஸ்துவின் அன்பைவிட்டு எதுவும் என்னைப் பிரிக்க முடியாது [பார்க்க, ரோமர் 8:35–39].

நான் ஒரு விசுவாசியாக இருக்கிறபடியால், எல்லாக் காரியங்களும் எனக்குச் சாத்தியமாகும் [பார்க்க, மாற்கு 9:23].

நான் தேவனுடைய ஆசாரியனாக இருக்கிறேன் [பார்க்க, வெளி. 1:6].





நான் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறபடியால், அவருடைய பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்துகிறார் [பார்க்க, ரோமர் 8:14].

நான் ஆண்டவரைப் பின்பற்றும்போது, எனது வாழ்க்கைப் பாதை இன்னுமதிகமாகப் பிரகாசமாக ஆகிக்கொண்டிருக்கிறது [பார்க்க, நீதி. 4:18].

தேவன் தமது ஊழியத்தில் பயன்படுத்தும்படியாக எனக்குச் சிறப்பான வரங்களைக் கொடுத்திருக்கிறார் [பார்க்க, 1 பேதுரு 4:10–11].

என்னால் பிசாசுகளை விரட்ட முடியும், நோயாளிகளின்மீது கை வைக்கும்போது அவர்கள் குணமடைவார்கள் [பார்க்க, மாற்கு 16:17–18].

தேவன் கிறிஸ்துவுக்குள் எப்போதும் என்னை வெற்றிசிறக்கப் பண்ணுகிறார் [பார்க்க, 2 கொரி. 2:14].

நான் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதியாக இருக்கிறேன் [பார்க்க, 2 கொரி. 5:20].

நான் நித்தியஜீவனைப் பெற்றிருக்கிறேன் [பார்க்க, யோவான் 3:16].

நான் விசுவாசித்து, ஜெபத்தில் கேட்கும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுவேன் [பார்க்க, மத். 21:22].

இயேசுவின் தழும்புகளால் நான் குணமாகிறேன் [பார்க்க, 1 பேதுரு 2:24].

நான் பூமிக்கு உப்பாகவும், உலகத்துக்கு வெளிச்சமாகவும இருக்கிறேன் [பார்க்க, மத். 5:13–14].

நான் தேவனுடைய சுதந்தரவாளியாகவும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரவாளியாகவும் இருக்கிறேன் [பார்க்க, ரோமர் 8:17].

நான் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக் கூட்டம், பரிசுத்த ஜாதி, தேவனுக்குச் சொந்தமான ஜனம் இவர்களில் ஒருவனாக இருக்கிறேன் [பார்க்க, 1 பேதுரு 2:9].

நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாக இருக்கிறேன் [பார்க்க, 1 கொரி. 12:27].

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடை.யேன் [பார்க்க, சங். 23:1].

கர்த்தர் என் பெலனாக இருக்கும்போது, நான் யாருக்கு அஞ்சுவேன்? [பார்க்க, சங். 27:1].

தேவன் நீண்ட ஆயுளைக் கொடுத்து என்னைத் திருப்திப்படுத்துவார் [பார்க்க, சங். 91:16].

கிறிஸ்து எனது வியாதிகளையும், எனது வேதனைகளையும் சுமந்தார் [பார்க்க, ஏசாயா 53:4–5].

கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன் [பார்க்க, எபி. 13:6].

தேவன் என்னை விசாரிக்கிறவரானபடியால், என் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்திருக்கிறேன் [பார்க்க, 1 பேதுரு 5:7].

நான் பிசாசை எதிர்த்துநிற்பேன், அவன் என்னைவிட்டு ஓடிவிடுவான் [பார்க்க, யாக். 4:7].

இயேசுவுக்காக நான் என் ஜீவனை இழக்கும்போது, மறுபடியும் அதைக் கண்டடைகிறேன் [பார்க்க, மத். 16:25].

நான் கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையாக இருக்கிறேன் [பார்க்க, 1 கொரி. 7:22].

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் [பார்க்க, பிலி. 1:21].

எனது குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது [பார்க்க, பிலி. 3:20].

தேவன் எனக்குள் துவங்கிய நற்கிரியையைச் செய்து முடிப்பார் [பார்க்க, பிலி. 1:6].

தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் [பார்க்க, பிலி. 2:13].

இது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நாம் செய்யக்கூடிய ஆக்கபூர்வமான அறிக்கைகளின் ஒரு மாதிரி மட்டுமேயாகும். இந்தச் சத்தியங்கள் நமது இருதயங்களில் ஆழமாக வேரூன்றும் வரையில் இவைகளைச் சொல்லிக்கொண்டிருப்பது நல்லதாகும். தேவன் சொல்லியிருப்பதற்கு விரோதமாக நாம் ஏதேனும் சொல்லி விடாதபடி நமது வாயின் வார்த்தைகளைக் காத்துக்கொள்ள வேண்டும்.



# 20

# துதியும் ஆராதனையும்

> அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது. ... உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார் [யோவான் 4:19–24].

ஆராதனையின் மிக முக்கியமான அம்சங்களை நாம் புரிந்துகொள்ளுவதற்கு இயேசுவானவரின் இந்த வார்த்தைகள் அஸ்திபாரமாக இருக்கின்றன. ‘‘உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்களைப்’’ பற்றிப் பேசும் அவர் அவர்களுடைய தகுதிகளை விவரித்திருக்கிறார். இது தொழுதுகொள்ளுபவர்களிடையே உண்மையில்லாமல் தொழுதுகொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டு கிறது. அவர்கள் தாங்கள் தேவனை ஆராதிப்பதாக நினைத்தாலும், உண்மையில் அவரை ஆராதிக்கவில்லை, ஏனென்றால் அவர்கள் அவர் சொல்லும் தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை.